# அரசாங்க சேவை ஆணைக்குழு

# வருடாந்த அறிக்கை

# 2014


இல. 177 , நாவல வீதி,

நாராஹேன்பிட்ட,

கொழும்பு 05.

| | | |
|---|---|---|
| தொலைபேசி | - | 011-2136600/ 011-2136650/ 011-2136700 |
| தொலை மடல் | - | sec-psc@sltnet.lk / info@psc.gov.lk |
| மின்னஞ்சல் | - | secretary@psc.gov.lk |
| இணையத்தளம் | - | www.psc.gov.lk |

எனது இல. : PSC/ADM/06/02/05/2013
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.

2015 செப்டம்பர் மாதம் 08 ஆம் திகதி

செயலாளர் நாயகம்,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்.

ஐயா,

**2014 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(5) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2014 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய இத்துடன் தங்களுக்கு பணிவுடன் அனுப்பிவைக்கின்றேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள

**ரீ.எம்.எல்.சீ. சேனாரத்ன**
**செயலாளர்,**
**அரசாங்க சேவை ஆணைக்குழு.**

## நோக்கு

தேசத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணிபுரியும் அரசாங்க சேவை

## செயற்பணி

வினைத்திறன்மிக்க, ஒழுங்குமுறையான அரசாங்க சேவையை ஏற்படுத்தி விருத்தி செய்வதன் மூலம் பாரபட்சமற்ற, பகிரங்கத்தன்மையுள்ள, நிலையான சேவையை மக்களுக்கு வழங்கல்

## 2014.01.01 - 2014.05.12 ஆம் திகதி வரை அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கத்தவர்கள்

### தவிசாளர்

வித்தியாஜோதி வைத்திய கலாநிதி திரு. தயாசிறி பெர்ணாந்து

### அங்கத்தவர்கள்

ஜனாதிபதி சட்டத்தரணி திரு. பாலித்த எம். குமாரசிங்ஹ

திருமதி சிறிமாவோ ஏ. விஜேரத்ன

திரு. எஸ்.சீ. மான்னப்பெரும

திரு. ஆனந்த செனவிரத்ன

திரு. என்.எச். பதிரண

திரு. எஸ். தில்லைநடராஜா

திரு. எம்.டீ.டபிள்யு. ஆரியவன்ச

திரு. ஏ. மொஹமட் நஹியா

## 2014.07.01 - 2014.12.31 ஆம் திகதி வரை அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கத்தவர்கள்

**தவிசாளர்**

சனாதிபதி சட்டத்தரணி நீதியரசர் திரு. சத்யா ஹெட்டிகே

**அங்கத்தவர்கள்**

திரு. எஸ்.சீ. மான்னப்பெரும

திரு. ஆனந்த செனவிரத்ன

திரு. என்.எச். பதிரண

திரு. எஸ். தில்லைநடராஜா

திரு. ஏ. மொஹமட் நஹியா

திருமதி. காந்தி விஜேதுங்க

திரு. சுனில் எஸ். சிறிசேன

மருத்துவர் திரு. ஐ.எம். சொய்ஸா குணசேகர

## பொருளடக்கம்


| தொடர்இல. | | விடயம் | பக்கம் |
|---|---|---|---|
| 1 | அறிமுகம் | | 01 |
| 2 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வரலாற்று ரீதியான பயணப் பாதை | | 01 |
| 3 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள் | | 02 |
| | 3.1 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் வினவக் கூடிய சந்தர்ப்பங்கள் | 03 |
| 4 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பான பொது மீளாய்வு | | 03 |
| 5 | மீளாய்வுக்குரிய வருடத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் | | 09 |
| | 5.1 | தாபனப் பிரிவு | 09 |
| | 5.1.1 | தாபனப் பிரிவின் பணிகள் | 10 |
| | 5.1.2 | தாபனப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு (2014.01.01 - 2014.12.31) | 10 |
| | 5.1.3 | தாபனப் பிரிவு எதிர்நோக்கிய சவால்களை வெற்றிகொள்ள மற்றும் செயலாற்றுகையை அதிகரித்துக்கொள்ள எடுக்கப்பட்ட புதிய நடவடிக்கைகள் | 14 |
| | 5.2 | நியமனம், பதவி உயர்வுப் பிரிவு | 15 |
| | 5.2.1 | நியமனம், பதவி உயர்வுப் பிரிவின் பணிகள் | 15 |
| | 5.2.2 | நியமனம், பதவியுயர்வுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு (2014.01.01 - 2014.12.31) | 16 |
| | 5.2.3 | 2014 ஆம் ஆண்டில் நியமனப் பிரிவின் பணிகள் தொடர்பான பொது மீளாய்வு | 17 |
| | 5.2.4 | நியமன மற்றும் பதவியுயர்வுப் பிரிவின் செயலாற்றுகையை அதிகரிக்க முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 25 |
| | 5.3 | ஒழுக்காற்றுப் பிரிவு | 25 |
| | 5.3.1 | ஒழுக்காற்றுப் பிரிவின் பணிகள் | 25 |
| | 5.3.2 | ஒழுக்காற்றுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு (2014.01.01 - 2014.12.31) | 27 |
| | 5.3.3 | ஒழுக்காற்றுப் பிரிவின் செயலாற்றுகையை அதிகரித்துக்கொள் எடுக்கப்பட்ட புதிய முன்னெடுப்புக்கள் | 28 |
| | 5.4 | மேன்முறையீட்டுப் பிரிவு | 28 |
| | 5.4.1 | மேன்முறையீட்டுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு (2014.01.01 - 2014.12.31) | 30 |
| | 5.4.2 | 2014 ஆம் ஆண்டில் மேன்முறையீட்டுப் பிரிவின் செயலாற்றுகையை அடைந்துகொள்வதில் முகம்கொடுத்த சவால்களும் பிறவும் | 32 |
| | 5.5 | நிருவாகப் பிரிவு | 32 |
| | 5.6 | கணக்குப் பிரிவு | 33 |
| 6 | நிதி ஒதுக்கீடு | | 33 |
| 7 | பணியாட் தொகுதி | | 33 |
| | 7.1 | நிறுவனக் கட்டமைப்பு (பின்னிணைப்பு 03) | 33 |
| | 7.2 | பணியாட் தொகுதியின் அமைப்பு | 33 |
| | 7.3 | பணியாட் தொகுதிக்கான பயிற்சி நடவடிக்கைகள் | 34 |
| 8 | 2014 ஆம் ஆண்டில் ஒவ்வொருப் பிரிவினாலும் விளக்கங்கள் சமர்பிக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | | 34 |
| 9 | ஆணைக்குழு கூட்டங்கள் | | 35 |
| 10 | நன்றி தெரிவிப்பு | | 35 |
| 11 | பின்னிணைப்புக்கள் | | 36 - 40 |

## 01. அறிமுகம்

18 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட 54(1) உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. இவ் அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுவார். 2011.05.13 ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பதவிக்காலம் 2014.05.12 ஆம் திகதியுடன் முடிவடைந்ததோடு 2014.07.01 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அரசியலமைப்பின் 55(5) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2014 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக தயாரிக்கப்படுகின்ற இவ் அறிக்கையை அரசாங்க சேவை ஆணைக்குழு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கின்றது.

## 02. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வரலாற்று ரீதியான பயணப் பாதை

பிரித்தானியர்களின் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் 1946 மே மாதம் 15 ஆம் திகதிய இலங்கை (அரசியலமைப்பு) அரச பேரவைக் கட்டளையின் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இதற்கமைய அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு, சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பான நிறைவேற்று அதிகாரங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டன.

1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் அதுவரை இருபத்தாறு வருட காலமாக சுதந்திரமாக இயங்கி வந்த அரசாங்க சேவை ஆணைக்குழு இல்லாதொழிக்கப்பட்டு, அரசாங்க சேவை தொடர்பான அதிகாரங்கள் அமைச்சரவையிடம் கையளிக்கப்பட்டன.

1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழு மீண்டும் நிறுவப்பட்டது. அவ்ஆணைக்குழு மேன்முறையீட்டு அதிகாரியாக மாத்திரம் செயற்பட்டது. 1992 ஆம் ஆண்டில் அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களின் (சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு மேலுள்ள பதவிகள் தவிர்ந்த) நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை, சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பான அதிகாரங்கள் அமைச்சரவையினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டதற்கிணங்க அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அவை நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆணைக்குழுவினால் அல்லது அதன் மூலம் தத்துவங்கள் கையளிக்கப்பட்ட குழுவொன்றினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு வழிவகுக்கும் தத்துவங்கள் அமைச்சரவையினால் தொடர்ந்தும் நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்டன.

2001 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக அரச சேவை தொடர்பாக அதுவரையும் இருந்து வந்த IX அத்தியாயம் நீக்கப்பட்டு புதிய அத்தியாயமொன்று சேர்க்கப்பட்டது. அதற்கிணங்க, அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கமைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற 09 அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களைக் கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழு தாபிக்கப்படுவதுடன், அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசின் பேரில் சனாதிபதி அவர்களினால் அவ் அங்கத்தவர்களுள் ஒருவர்

ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுவார். இத் திருத்தத்தினூடாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிலை பாரிய மாற்றத்திற்கு உட்பட்டதுடன், அதற்கமைய அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க அரசாங்க சேவை நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை என்பன தொடர்பில் அமைச்சரவைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த தத்துவங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டன. மேலும் இங்கு அரசாங்க சேவை ஆணைக்குழு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக பாராளுமன்றத்திற்கு வகை சொல்வதற்கும் பதில் கூறுவதற்கும் கட்டுப்பட்ட நிறுவனமாக மாற்றப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தாபிதம் மற்றும் அதன் பணிகளுடனும் தொடர்புடைய விடயங்கள் திருத்தப்பட்டன. இவ் ஆணைக்குழு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு பதில் அளிக்க வேண்டிய ஆணைக்குழுவாகும். 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக திருத்தப்பட்ட 54(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. சனாதிபதி அவர்களினால் அவ் அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுவார். இவர்கள் மூன்று வருட காலப்பகுதிக்கு தமது பதவியை வகிப்பதுடன் தொடர்ந்தும் அவ்வாறனதொரு காலப்பகுதிக்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறுகின்றனர்.

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக திருத்தப்பட்டவாறான 55(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பான சகல கொள்கை ரீதியான விடயங்களுக்கும் அமைச்சரவையினால் ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். அரசிலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான தத்துவங்கள் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளன.

## 03. <u>அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள்</u>

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், தரைப்படை, கடற்படை, விமானப் படை அங்கத்தவர்கள், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களினால் நியமிக்கப்பட்ட மாகாண அரச உத்தியோகத்தர்கள், சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட அமைச்சுச் செயலாளர்கள், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரசாங்கக் கம்பனிகள் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் தவிர்ந்த மாகாண சபைகளில் பணியாற்றும் நாடு முழுவதற்குமான சேவையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிற அனைத்து அரச உத்தியோகத்தர்களினதும்,

- நியமனம்
- பதவியுயர்வு
- இடமாற்றம்
- ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவி நீக்கம் செய்தல் என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் வினவக் கூடிய சந்தர்ப்பங்கள்

கீழ்க் காணும் சந்தர்ப்பங்கள் தவிர ஆணைக்குழுவின் தீர்மானங்களை எந்தவொரு நீதிமன்றத்திலும் அல்லது நியாய சபையிலும் கேள்விக்குட்படுத்த முடியாது.

- அரசியலமைப்பின் 61 அ உறுப்புரையின் பிரகாரம் 126 ஆவது உறுப்புரையின் (1), (2), (3), (4), (5) ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அடிப்படை உரிமை சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருதல்.
- அரசிலமைப்பின் 59(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்தல்.

## 04. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பான பொதுவான மீளாய்வு

2014 சனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இயங்கிய அரசாங்க சேவை ஆணைக்குழு இலங்கை வாழ் அனைத்து மக்களது நலன் பொருட்டும் தாய் நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டும் கௌரவம் மிக்க அரச சேவையொன்றினை ஏற்படுத்தி முன்னெடுத்துச் செல்லும் உறுதிப்பாட்டுடன் தனது செயற்பாடுகளை வெளிப்படைத்தன்மையுடனும் நேர்மையுடனும் நிறைவேற்றியது.

அரசாங்க சேவையின் நிறைவேற்றுத் தர சேவைகளுக்குரிய பதவிகளுக்கான நியமனங்கள், பதவி உயர்வுகள் வழங்கும் போது ஒவ்வொரு சேவைக்குமுரிய விசேட கல்வி அறிவு, திறமை மற்றும் சேவை அனுபவம் என்பன கவனத்திற்கொள்ளப்பட்டு ஆட்சேர்ப்புத்திட்டங்களுக்கு அமைவாக வெளிப்படைத்தன்மையுடன் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் செய்யப்பட்டன. மேலும் உரிய தருணத்தில் ஆட்சேர்ப்புக்களை செய்வதனூடாக அரசாங்க சேவை தற்போது வேண்டி நிற்கின்ற கல்வி அறிவு, திறமை மற்றும் சிறந்த உளப்பாங்குகள் கொண்ட இளைய சமுதாயத்தை அரசாங்க சேவையின் நிறைவேற்றுத்தரத்திலான சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடிந்துள்ளதுடன் ஆட்சேர்ப்புத்திட்டங்களுக்கு அமைவாக தாமதமின்றி பதவி உயர்வுகளை வழங்குவதன் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தி தரமான மற்றும் பயனுறுதிவாய்ந்த அரசாங்க சேவையை முன்னெடுத்துச் செல்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஆயினும், இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் வெளியிடப்படும் வருடாந்த பரீட்சை திகதி அட்டவணைக்கு அமைவாக பரீட்சைகளை நடாத்துவதற்கு ஏற்ற விதத்தில் திணைக்களத் தலைவர்கள் தமது திணைக்களத்திற்குரிய ஆட்சேர்ப்பு தொடர்பான அறிவித்தலை உரிய காலப்பகுதியில் பிரசுரிப்பதற்கு தவறுவதன் காரணமாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கு தடையாக உள்ளது.

அமைச்சரவையினால் கொள்கை தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் தொடர்பான பணிகள் குறித்து ஏற்புடைய நிறுவனங்களினால் உரிய கவனம் செலுத்தப்படாமையும் ஆணைக்குழுவின் பணிகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு இடையூறாக உள்ளது. உரிய சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத்திட்டம் அனுமதிக்கப்பட்டிருந்தும் விசேட நிபுணத்துவ அறிவு மற்றும் திறன் தேவைப்படாத பதவிகளுக்கு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீள சேவைக்கு அமர்த்துவதில் அதிகமான நிறுவனங்கள் கூடிய கரிசனை செலுத்தி வருவதானது அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு எதிர்மறையான தாக்கத்தை விளைவிப்பதோடு மாத்திரமல்லாமல் அது தரமான மற்றும் வினைத்திறன்மிக்க அரசாங்க சேவையைப் பேணிவருவதில் பாதிப்பான ஒரு நிலைமையை தோற்றுவிக்கக்கூடும்.

அமைச்சு செயலாளர்கள் / திணைக்களத் தலைவர்களினால் ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டு பல வருடங்கள் சென்ற பின்னர் அதன் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றப்பத்திரத்தை வழங்குமாறு சிபாரிசு செய்து குற்றப்பத்திர வரைவுகளை சமர்ப்பிப்பதும் ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அக்குற்றப்பத்திரங்களை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது அவ்வரைவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மிக விரைவில் விசாரணை செய்து முடிக்க முடியுமான குற்றங்களாக இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. எவரேனுமொரு உத்தியோகத்தர் ஓய்வூதியம் பெறுவதற்கு அண்மித்துள்ள சந்தர்ப்பத்தில் பல வருடங்களுக்கு முன்னர் அவரால் புரியப்பட்ட ஏதேனுமொரு குற்றம் தொடர்பாக குற்றப்பத்திர வரைவுகளை சமர்ப்பிப்பதானது மிகவும் இக்கட்டான ஒரு நிலையை தோற்றுவிக்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏற்புடைய ஒழுக்காற்று பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரை உத்தியோகத்தரினது ஓய்வூதியம் தொடர்பாக தீர்மானமொன்றை வழங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் அவரது ஓய்வூதியத்தை வழங்குவதில் தாமதத்தையும் ஏற்படுத்துகின்றது.

மேலும், ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டு பல வருடங்கள் சென்ற பின்னர் குற்றப்பத்திரங்களை வழங்குகின்ற போது ஒழுக்காற்று செயன்முறையின் தரமும் பாதிக்கப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏற்புடைய சாட்சியாளர்கள் ஓய்வுபெறல், மரணித்தல், கால இடைவெளி காரணமாக ஆவணங்களை தேடிப்பெறுவதில் ஏற்படும் சிரமங்கள் போன்ற காரணிகளினால் ஒழுக்காற்று செயன்முறையை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு இயலாதுள்ளது. இவ்வாறான முறையில் ஒழுக்காற்று செயன்முறையை முன்னெடுத்துச் செல்வதனால் ஒழுக்காற்று செயன்முறையின் செயற்திறனில் பிரச்சினை எழுகின்றது. தேவையற்ற தாமதங்களினால் உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கவேண்டிய வரப்பிரசாதங்களும் இல்லாமலாக்கப்படுவதனை அவதானிக்க முடிந்துள்ளது.

அமைச்சுச் செயலாளர்கள் / திணைக்களத் தலைவர்களினால் ஒழுக்காற்று நடவடிக்கைகளை விரைவாக நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருப்பதும் ஆணைக்குழு எதிர்நோக்கும் பிரிதொரு பிரச்சினையாகும். உதாரணமாக ஏதேனுமொரு விடயம் தொடர்பாக அமைச்சுச் செயலாளரின் / திணைக்களத் தலைவரின் சிபாரிசும் அவதானிப்புரைகளும் வேண்டப்பட்டு அல்லது குறைபாடுடைய ஏதேனும் ஆவணங்கள் வேண்டப்பட்டு பல ஞாபகமூட்டல் கடிதங்கள் கூட அனுப்பப்பட்டுள்ள போதிலும் அதற்கான பதில்

கடிதங்கள் தாமதமடைவதன் காரணமாக ஒழுக்காற்று செயன்முறையை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் குறைந்த காலப்பகுதிக்குள் நடாத்தி முடிப்பதில் பல தடைகள் எழுந்துள்ளன. இவ்வாறான நிலை காரணமாக ஒட்டுமொத்த ஒழுக்காற்று செயன்முறையினது வினைத்திறனும் அதன் தரமும் பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான நிலைமைக்கு தீர்வாக 2014 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் மற்றும் அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு என்பவற்றுடன் இணைந்து அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் ஒழுக்காற்று விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முறைமைசார் ஒழுக்காற்று விசாரணை அறிக்கைகளை பரிசீலனை செய்கின்ற போது ஏற்புடைய அமைச்சின் செயலாளர் மற்றும் திணைக்களத் தலைவர்கள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழு கையளிக்கப்படாமையினால் ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது. இதன் காரணமாக பாரதூரமான ஒழுக்காற்று விடயங்கள் தொர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமல் கைவிடப்படுகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களை தவிர்த்து சிறந்த முறையில் ஒழுக்காற்று செயன்முறையை முன்னெடுத்துச் செல்வதற்கு அமைச்சுச் செயலாளர்களினதும் திணைக்களத் தலைவர்களினதும் ஒழுக்காற்றுத் தத்துவங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கப்படுவது பொருத்தமென அவதானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டங்கள் மற்றும் சேவை பிரமாணக் குறிப்புகளுக்கு அமைய தற்போதுள்ள உத்தியோகத்தர்களை ஏற்புடைய பதவிகளுக்கு உள்ளீர்ப்புச் செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் (தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம்) தெளிவாக உள்ள போதிலும் சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் ஏற்புடைய உள்ளீர்ப்புக்களைச் செய்யவேண்டிய முறை பற்றி அடிக்கடி அறிவுரை கோரி கடிதங்களை அனுப்புவதன் காரணமாக அவ்வாறான உள்ளீர்ப்புக்களை செய்வதில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஏற்புடைய நிறுவனங்களில் விடயத்திற்கு பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு அழைத்து கலந்துரையாடல்களை நடாத்துவதற்கும் வருடாந்தம் நடாத்தப்படும் மீளாய்வுக் கூட்டத்தில் உள்ளீர்ப்பு செயன்முறை தொடர்பாக பொதுவாக மேலதிக செயலாளர்களை அறிவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அவ்வாறே, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய சுற்றுநிருபங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக உரிய விளக்கங்களைப் பெறாமல் சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் அத்தகைய பிரச்சினைகள் தொடர்பாக அவதானிப்புக்கள் மற்றும் விதப்புரைகள் ஏதும் இன்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் அறிவுரைகள் கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டன. அவ்வாறு முன்வைக்கப்பட்ட பல்வேறுபட்ட வேண்டுகோள்களுக்கு பதில் அளிப்பது அடிக்கடி நிகழும் சம்பவமாக காணப்பட்டது. இதற்குத் தீர்வாக ஏற்புடைய நிறுவனங்களில் விடயத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களை அழைத்து அவர்களுக்கு அது தொடர்பாக அறிவூட்டப்பட்டது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் ஆட்சேர்ப்புத்திட்டங்களில் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட முடியாத விசேட சந்தர்ப்பங்களில் அவ்வாறான ஏற்பாடுகளுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பூர்வாங்க அனுமதியைப் பெறாமல் பின்னர் அதற்கான தழுவல் அங்கீகாரத்தை வேண்டி நிற்பதன் காரணமாக தேவையற்ற பிரச்சினைகள் எழுந்த பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள் தமது சேவைக்குரிய நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்க கட்டுப்பாடுகள் தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டு அதற்கு எதிராக நியாயமான மேன்முறையீடு ஒன்றினை செய்வதற்கான வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கும் அமுலிலுள்ள சட்ட வரையறைக்குள்ளால் அத்தகைய பிரச்சினைகளுக்கு நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற தீர்மானங்களை வழங்குவதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. ஆயினும் குறிப்பிட்ட காலவரையறை விதிக்கப்பட்டு அறிக்கைகள் வேண்டப்பட்ட போதிலும் அக்காலப்பகுதிக்குள் அவ்வறிக்கைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறுவதில்லை. மேலும் அமைச்சுக்களிலிருந்து மற்றும் திணைக்களங்களிலிருந்து அரசாங்க உத்தியோகத்தர்களின் மேன்முறையீடுகள் தொடர்பான தகவல்களை அறிக்கையிடும் போது அத்தகவல்களின் உண்மைத் தன்மை தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்படாமையினால் மீண்டும் மீண்டும் தகவல்களை கோர வேண்டிய நிலை ஏற்பட்டது. தாபன விதிக்கோவை, ஏனைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் என்பவற்றில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகவும் பிழையான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அறிக்கைகள் தெளிவற்ற விதத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு அமைச்சினதும் திணைக்களத்தினதும் பணிகள் மற்றும் கடமைகள் ஒவ்வொன்றுக்கு மாறுபட்டு காணப்படுவதுடன் அவ்வாறே ஒவ்வொரு நிறுவனத்திலும் அரசாங்க உத்தியோகத்தர்களினால் புரியப்படும் குற்றங்களின் பாரதூரமும் அவர்களது தரத்திற்கேற்ப மாறுபடக்கூடியன. அவ்வாறான நிலைமைகள் தெளிவாக அறிக்கையிடப்படாமையினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானங்களும் தாமதமடைகின்றன.

பொது மனுக் குழுவுக்கு முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழு எப்பொழுதும் தனது கருத்துக்களை முன்வைத்துள்ளது. மேலும் சகல விடயங்கள் தொடர்பாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழு தனது மேலான கவனத்தைச் செலுத்தி சட்டத்தின் வரையறைகளுக்குள்ளால் வழங்கமுடியுமான சகல நிவாரணங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. பொது மனுக் குழுவினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் சகல பொதுமக்கள் மனுக்களும் மிகவும் உன்னிப்பாக ஆராயப்பட்டு அவை தொடர்பான விரிவான அறிக்கைகள் பொது மனுக் குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கும் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அழைப்புவிடுக்கின்ற போது பொது மனுக் குழுவின் முன் ஆஜராகி கருத்துக்களை முன்வைப்பதற்கு உத்தியோகத்தர்களை அனுப்புவதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் ISO 9001:2008 சர்வதேச தர நியமங்களின் அடிப்படையில் முகாமைத்துவ கட்டமைப்பொன்று நிறுவப்பட்டுள்ளது.

அதன் நிமித்தம் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழ் 2014.02.22 ஆந் திகதி தொடக்கம் மூன்று வருட காலப்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த தர முகாமைத்துவ கட்டமைப்பில் தொடர்ந்தேர்ச்சியான முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனூடாக ஏற்புடைய செயன்முறைக்கு கால நிர்ணயம் மற்றும் கட்டம் கட்டமான பணிகள் வழங்கப்பட்டிருப்பதனால் நியாயமான ஒரு காலப்பிரிவுக்குள் மிகவும் முறையாக பணிகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனூடாக சகல பணிகளையும் சரியாகவும் விரைவாகவும் நிறைவு செய்வதற்கான ஆற்றல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய நாளாந்தம் கிடைக்கப்பெறும் கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் முகாமைத்துவ கட்டமைப்பு ஒன்றின் ஊடாக கணினி மயப்படுத்தப்படுகின்றன. இங்கு கடிதம் தொடர்பான முக்கிய விடயங்கள் அனைத்தும் உள்ளடக்கப்படுவதோடு சகல கடிதங்களுக்கும் தனித்தனியான எண் ஒன்றும் வழங்கப்படுகின்றது. உள்இணைப்பாக்கம் செய்யப்பட்ட கணினி கட்டமைப்பு ஒன்றினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சகல கணினிகளும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. எனவே அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் கடிதங்கள் இக்கட்டமைப்பு ஊடாக ஏற்புடைய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு கடிதம் தொடர்பாகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஒவ்வொரு கட்டம் கட்டமாக நாளதுவரைப்படுத்த முடியும் என்பதோடு அதன் மூலம் ஏதேனுமொரு கடிதம் தொடர்பாக வினவும் ஒருவருக்கு ஆவண முகாமைத்துவ கட்டமைப்பை பயன்படுத்தி அந்த கடிதம் தொடர்பாக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய தெளிவான பதிலொன்றை அளிக்கவும் முடியும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவில் நிறுவப்பட்டுள்ள இந்த ஆவண முகாமைத்துவ கட்டமைப்பு முறையை கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பாக வினைத்திறனுடன் செயலாற்றுவதற்காக ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திறைசேரி கட்டிடத் தொகுதியில் அமைந்திருந்த அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் இது வரையில் ஏழு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொண்டு செல்வதற்கு அதிகமான செலவுகள் ஏற்பட்டுள்ளன. அத்தோடு அலுவலக கட்டிடத்தின் வாடகையாக பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டுள்ளது. எனவே, 2013 ஆண்டு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சுக்கு அண்மையிலுள்ள ஆ.வ இலக்கம் 9175 இன் துண்டு இலக்கம் 19 மற்றும் 20 இல் காட்டப்பட்டுள்ள 0.1770 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள அரசுக்கு சொந்தமான காணி அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டது.

அதற்கிணங்க, புதிய கட்டிடத்தை அமைப்பதற்கான மதிப்பீடான 670 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டுத் தொகைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, கட்டிட நிர்மாணப் பணிகளை கட்டிடத் திணைக்களத்தின் பூரண கண்காணிப்பின் கீழ் செயற்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மிக நீண்ட காலமாக அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு குறைபாடாக இருந்து வந்த நிரந்தர கட்டிடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது முக்கிய மைற்கல்லாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நிறைவேற்றப்படும் சேவைகள் தொடர்பாக அவர்களுக்கு ஏற்புடைய தகவல்களை வழங்க விரிவான செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள்/அறிவித்தல்கள்/சட்ட ஏற்பாடுகள்/ஒழுங்கு விதிகள் தொடர்பான தகவல்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதால் மிகவும் விரைவாகவும் சிறமமின்றியும் அத்தகவல்களைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறே ஒவ்வொரு வாரத்திலும் புதன் கிழமை பொது மக்கள் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்தினத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு வருகை தரும் உத்தியோகத்தர்களுக்கு அவர்களால் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக தற்போதைய நிலவரம் குறித்து தகவல்களை அறிந்துகொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழு உத்தியோகத்தர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் விளையாட்டு பொழுது போக்கு அம்சங்களுக்காகவும் அலுவலக நலன்புரிச் சங்கத்தினால் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டன. நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படும் வருடாந்த சுற்றுலா, புத்தாண்டு விழா, வெசாக் உற்சவம், பொசொன் அன்னதானம் மற்றும் தங்களது கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் பாட்டுக் கச்சேரி போன்ற செயற்பாடுகள் இவ்வருடத்திலும் சிறப்பாக நடைபெற்றன.

2012 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற அரச / சிவில் சேவைகள் தலைவர்களின் இரண்டாவது மாநாட்டில் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க அதனது மூன்றாவது மாநாட்டை இலங்கையில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதற்கிணங்க, அரசாங்க சேவை ஆணைக்குழுக்களினது தலைவர்களின் மூன்றாவது மாநாடு 2014.01.09 மற்றும் 2014.01.10 ஆகிய இரு தினங்களில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது. அரசாங்க சேவை ஆணைக்குழு உத்தியோகத்தர்களின் வழிநடாத்தலின் பேரில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மாநட்டில் சார்க் நாடுகளைப் பிரதிநிதிப்படுத்தும் வகையில் அந்நாட்டு அரச / சிவில் அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் தலைவர்கள் பலர் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டின் பிரதம அதிதியாக பிரதி நிதி அமைச்சர் கௌரவ சரத் அமுனுகம அவர்கள் கலந்துகொண்டார். அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் சார்க் நாடுகளின் அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டன. அத்தோடு அந்த நாடுகளுக்கிடையில் திறன் விருத்தி மற்றும் புரிந்துணர்வு செயலமர்வுகளுக்கான இணக்கப்பாடுகள் எய்தப்பட்டன. அதற்கிணங்க இலங்கையில் சார்க் நாடுகளின் அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவையின் செயலாற்றுகை முகாமைத்துவம் தொடர்பாக செயலமர்வு ஒன்றினை நடாத்துவதற்கு இணக்கம் தொரிவிக்கப்பட்டதோடு அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் தலைவர்களது அடுத்த மாநாட்டை வங்காள தேசத்தில் நடாத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

சார்க் நாடுகளின் அரசாங்க சேவையின் செயலாற்றுகை முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு 2014.09.17 மற்றும் 2014.09.18 ஆகிய இரு தினங்களில் சார்க் நாடுகளின் அரச/ சிவில் அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் பங்குபற்றலுடன் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் நடாத்தப்பட்டது. அந்தந்த நாடுகளில் காணப்படும் செயலாற்றுகை முகாமைத்துவ கட்டமைப்புக்கள் பற்றிய புரிந்துணர்வை பெற்றுக்கொள்வதற்கும் அறிவை பரிமாற்றிக்கொள்வதற்கும் இந்த செயலமர்வு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும், தேசிய மட்டத்தில் இலத்திரனியல் மனித வள முகாமைத்துவ (e -HRM) கட்டமைப்பை தயாரிக்கும் பணிகள் தகவல் தொழில்நுட்ப முகவராண்மை, அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு என்பவற்றின் ஒத்துழைப்புடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது. இது தொடர்பான ஆரம்ப ஆய்வு அறிக்கையை தயாரிப்பதற்கு இந்த வருடத்திற்குள் இயலுமாகியது. மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இணைந்து இந்த திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல அரசாங்க சேவை ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.

## 05. மீளாய்வுக்குரிய வருடத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அரசியலமைப்பினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களை நிறைவேற்றுவதற்கு பின்வரும் பிரிவுகளினால் தேவையான பங்களிப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

- தாபனப் பிரிவு
- நியமன, பதவியுயர்வுப் பிரிவு
- ஒழுக்காற்றுப் பிரிவு
- மேன்முறையீட்டுப் பிரிவு
- நிருவாகப் பிரிவு
- கணக்குப் பிரிவு

### 5.1 தாபனப் பிரிவு

குடியரசு அரசியலமைப்பின் 61 ஆ உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வேறு விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்படும் வரை, அமுலாவது ஆரம்பமாகும் திகதியில் அரசாங்க சேவைக்குரியதாக செயலிலிருந்த அனைத்து விதிகள், கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் அவ் அத்தியாயத்தின் கீழ் அரசாங்க சேவையுடன் தொடர்புடையதாக ஆக்கப்பட்ட அல்லது ஏற்பாடுகள் செய்யப்பட்ட விதிகள், கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றில் தேவையான திருத்தங்களுடன் அமுலிலுள்ளதாக கருதப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், அரசாங்க சேவையுடன் தொடர்புடைய விதிகள், கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றுக்கான ஏற்பாடுகளை செய்யும் பணி அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தாபனப் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் பின்வருமாறு:

மேலதிக செயலாளர் - 01
சிரேஷ்ட உதவிச் செயலாளர் - 01
உதவிச் செயலாளர் - 04
முகாமைத்துவ உதவியாளர் - 07

### 5.1.1 தாபனப் பிரிவின் பணிகள்

- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குரிய பொறுப்புகள், தத்துவங்கள் என்பவற்றைக் கையளிப்பது தொடர்பான பணிகள்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளை வகுத்தல், திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் வெளியிடுதல்.
- அரசாங்க சேவையின் நடைமுறை ஒழுங்கு விதிகளை அடிப்படையாகக் கொண்ட ஆலோசனைத் தொகுதிகளைத் தயாரித்தலும் அவை தொடர்பில் தெளிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தலும்.
- சுற்றறிக்கைகள், கட்டளைகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றை வெளியிடல்.
- அரசாங்க சேவையுடன் தொடர்புடைய சேவைப் பிரமாணக் குறிப்புக்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள் என்பவற்றை தயாரித்தலும் அவற்றில் திருத்தங்களைச் செய்தலும்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், சேவைப் பிரமாணக் குறிப்புக்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், சுற்றறிக்கைகள், கட்டளைகள் என்பனவற்றிற்கு அப்பாற்பட்டு செயற்படும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்.
- நடைமுறை ஒழுங்கு விதிகளில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் பொருள்கோடல்.
- அரசாங்க சேவையுடன் தொடர்புடைய நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கு அமைய தரவு முறைமையை விருத்தி செய்தல், இற்றைப்படுத்தல், பேணிவரல் மற்றும் தகவல்களை வழங்குதல்.
- அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பான ஒழுங்கு விதிகளை வகுத்தலும் திருத்தங்களை மேற்கொள்ளலும்.

### 5.1.2 தாபனப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு - (2014 சனவரி 01 ஆம் திகதி முதல் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரை)

மேற்சொன்ன காலப்பகுதியில் கீழ்க் காணும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புதிய ஆட்சேர்ப்புத் திட்டங்கள் | 117 |
| 2 | புதிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் | 04 |
| 3 | ஆட்சேர்ப்புத் திட்ட திருத்தம் | 44 |
| 4 | சேவைப் பிரமாணக் குறிப்புகள் திருத்தம் | 17 |
| 5 | இடமாற்ற ஒழுங்கு விதிகள் | 06 |
| 6 | சுற்றறிக்கைகள் | 03 |
| 7 | விசேட சந்தர்ப்பங்களின் போது ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்கு செய்யப்படுகின்ற கோரிக்கைகள் | 37 |

| | | |
|---|---|---|
| 8 | விசேட சந்தர்ப்பங்களின் போது சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்கு செய்யப்படுகின்ற கோரிக்கைகள் | 11 |
| 9 | அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதிகளுடன் தொடர்புடைய விடயங்கள் | 01 |
| 10 | கொள்கைகள் தொடர்பான விடயங்கள் | 114 |
| 11 | பொதுவான விடயங்கள் | 51 |
| 12 | உயர்நீதிமன்றம், நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை, மேன்முறையீட்டு நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் | 57 |
| 13 | ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களை சரிசெய்தல் | 24 |
| | **மொத்தம்** | 486 |

*அட்டவணை இல. 01*




*படம் 01*

## 2014.01.01- 2014.12.31 திகதி வரை அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள் - (117)

| தொ. இல | **அமைச்சு** | அங்கீகரிக்கப்பட்டவை |
|---|---|---|
| 1 | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 5 |
| 2 | நிதி, திட்டமிடல் அமைச்சு | 4 |
| 3 | நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு | 1 |
| 4 | புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு | 3 |
| 5 | நீர்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு | 6 |
| 6 | சுகாதார அமைச்சு | 4 |
| 7 | பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு | 0 |
| 8 | கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 0 |

| | | |
|---|---|---|
| 9 | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு | 0 |
| 10 | பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு | 0 |
| 11 | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு | 0 |
| 12 | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 1 |
| 13 | மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு | 1 |
| 14 | நிர்மாணத்துறை,பொறியியல் சேவைகள்,வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு | 4 |
| 15 | நீதி அமைச்சு | 8 |
| 16 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 2 |
| 17 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 1 |
| 18 | உயர் கல்வி அமைச்சு | 1 |
| 19 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 1 |
| 20 | அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 2 |
| 21 | பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 0 |
| 22 | தபால் சேவைகள் அமைச்சு | 2 |
| 23 | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 1 |
| 24 | சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திவள அமைச்சு | 0 |
| 25 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு | 2 |
| 26 | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 2 |
| 27 | கல்வி அமைச்சு | 3 |
| 28 | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | 0 |
| 29 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 1 |
| 30 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 6 |
| 31 | சமூக சேவைகள் அமைச்சு | 1 |
| 32 | விளையாட்டுத்துறை அமைச்சு | 4 |
| 33 | கமத்தொழில் அமைச்சு | 2 |
| 34 | மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு | 3 |
| 35 | போக்குவரத்து அமைச்சு | 4 |
| 36 | இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 3 |
| 37 | கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 3 |
| 38 | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 4 |
| 39 | சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 2 |
| 40 | சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | 1 |
| 41 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சு | 0 |
| 42 | சிவில் விமான சேவை அமைச்சு | 0 |
| 43 | தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 0 |
| 44 | கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 0 |
| 45 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 2 |
| 46 | வன சீவராசிகள் வளப் பாதுகாப்பு அமைச்சு | 3 |
| 47 | மீள்குடியேற்ற அமைச்சு | 1 |

| | | |
|---|---|---|
| 48 | மக்கள் உறவுகள் மற்றும் மக்கள் அலுவல்கள் அமைச்சு | 3 |
| 49 | தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு | 0 |
| 50 | அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு | 0 |
| 51 | தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு | 0 |
| 52 | தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 2 |
| 53 | உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு | 1 |
| 54 | அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 0 |
| 55 | கணக்காய்வாளர் திணைக்களம் | 2 |
| 56 | சனாதிபதி செயலகம் | 6 |
| 57 | பிரதமர் அலுவலகம் | 0 |
| 58 | தாவரப் பூங்கா மற்றும் பொது பொழுதுபோக்கு அமைச்சு | 2 |
| 59 | அமைச்சரவை அலுவலகம் | 1 |
| 60 | இலஞ்சம், ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு | 1 |
| 61 | சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு | 4 |
| 62 | தேர்தல்கள் திணைக்களம் | 1 |
| | மொத்தம் | 117 |

அட்டவணை இல 02

## 2014ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட இடமாற்ற ஒழுங்கு விதிகள்(06)

1. சமூக நலனோம்பல் அத்தியட்சகர் மற்றும் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கான வருடாந்த இடமாற்ற ஒழுங்கு விதிகள்
2. வருடாந்த இடமாற்ற ஒழுங்கு விதிகள் - 2015 (இலங்கை நிர்வாக சேவை விசேட தரம்)
3. இலங்கை நிர்வாக சேவை இடமாற்ற ஒழுங்கு விதிகள் - 2015
4. தேசிய ஒருமைப்பாட்டு இணைப்பாளர் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு ஊக்குவிப்பு உதவியாளர்களின் இடமாற்ற ஒழுங்கு விதிகள்
5. கமநல சேவை நிலைய எழுதுனர்களின் வருடாந்த இடமாற்ற ஒழுங்கு விதிகள்
6. ஆயுர்வேத சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற ஒழுங்கு விதிகள்

## 2014 ஆம் ஆண்டுக்குரிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்கள் (03)

1. 01/2014 - வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல்.
2. 02/2014 - அரசாங்க சேவையின் “செயலூக்கமுள்ள சேவைக் காலம்” பற்றிய பொருள்கோடல்.
3. 03/2014 - 2006.01.01 திகதி தொடக்கம் இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை மற்றும் இலங்கை விவசாய சேவைகளின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்புக்களின் ஏற்பாடுகளை அமுலாக்கம் செய்தல்.

## 2014 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்(17)

1. ஒன்றிணைந்த சாரதிகள் சேவை பிரமாணக் குறிப்பு - இரு முறை திருத்தப்பட்டுள்ளது
2. இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பு
3. இலங்கை விஞ்ஞான சேவை பிரமாணக் குறிப்பு
4. இலங்கை நில அளவையாளர் சேவை பிரமாணக் குறிப்பு
5. இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை பிரமாணக் குறிப்பு
6. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை பிரமாணக் குறிப்பு
7. இலங்கை தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பு
8. இலங்கை தாதியர் சேவை பிரமாணக் குறிப்பு
9. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பு (இரு முறை திருத்தப்பட்டுள்ளது)
10. அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சக சேவை பிரமாணக் குறிப்பு
11. இலங்கை கணக்காளர் சேவை பிரமாணக் குறிப்பு
12. இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு
13. இலங்கை கல்வியியலாளர் சேவை பிரமாணக் குறிப்பு

} மடிஹேவா குழுவின் சிபாரிக்கு அமைய பழைய சேவை பிரமாணக் குறிப்பு முற்றாக திருத்தம் செய்யப்பட்டது.

14. இலங்கை திட்டமிடல் சேவை
15. இலங்கை பொறியியலாளர் சேவை

## 2014.01.01ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள் (04)

1. இலங்கை கணக்காய்வாளர் சேவை பிரமாணக் குறிப்பு
2. இலங்கை நில அளவையாளர் சேவை பிரமாணக் குறிப்பு
3. இலங்கை அதிபர் சேவை (மடிஹேவா குழுவின் சிபாரிசுக்கு அமைய தயாரிக்கப்பட்டது)
4. இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை பிரமாணக் குறிப்பு

### 5.1.3 தாபனப் பிரிவு முகம்கொடுத்த சவால்களை வெற்றிகொள்ள மற்றும் செயலாற்றுகையை அதிகரிக்க முன்னெடுக்கப்பட்ட புதிய நடவடிக்கைகள்

1) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டங்கள் மற்றும் சேவை பிரமாணக் குறிப்புகளுக்கு அமைய ஏற்புடைய பதவிகளுக்கு தற்போதுள்ள உத்தியோகத்தர்களை உள்ளீர்ப்புச்செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் (தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம்) தெளிவாக உள்ளபோதும் சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் எற்புடைய உள்ளீர்ப்புக்களைச் செய்யவேண்டிய முறை பற்றி அடிக்கடி அறிவுரை கோரி கடிதங்களை அனுப்புதல்.

- ➢ அவ்வாறான உள்ளீர்ப்புக்களை செய்வதில் எழுந்துள்ள பிரச்சினைகளை தொடர்பாக ஏற்புடைய நிறுவனங்களில் விடயத்திற்கு பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு அழைத்து கலந்துரையாடல்களை நடாத்தல் மற்றும் வருடாந்தம் நடாத்தப்படும் மீளாய்வுக் கூட்டத்தில் உள்ளீர்ப்பு செயன்முறை

தொடர்பாக பொதுவாக மேலதிக செயலாளர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

2) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய சுற்றுநிருபங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக உரிய விளக்கங்களைப் பெறாமல் சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் ஏற்புடைய பிரச்சினைகள் தொடர்பாக அவதானிப்புக்கள் மற்றும் விதப்புரைகள் இன்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் அறிவுரைகளை கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டன. இதன் காரணமாக அரசாங்க ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு பதில் அளிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

- ஏற்புடைய நிறுவனங்களில் விடயத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களை அழைத்து அவர்களுக்கு அது தொடர்பாக அறிவூட்டப்பட்டது.

3) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் ஆடசேர்ப்புத்திட்டங்களில் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட முடியாத விசேட சந்தர்ப்பங்களில் அவ்வாறான ஏற்பாடுகளுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பூர்வாங்க அனுமதியைப் பெறாமல் பின்னர் அதற்கான தழுவல் அங்கீகாரத்தை வேண்டி நிற்பதன் காரணமாக தேவையற்ற பிரச்சினைகள் எழுந்தன.

## 5.2 நியமனம், பதவியுயர்வுப் பிரிவு

அமைச்சரவையின் பணிப்பின் பிரகாரம் 1733/52 ஆம் இலக்க 2011.11.25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவினது தத்துவங்கள் கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களின் (அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரச சேவை உத்தியோகத்தர்கள், நீதிச் சேவை உத்தியோகத்தர்கள் நீங்கலாக) நியமனங்கள், பதவியுயர்வுகள் தொடர்பில் பின்வரும் பணிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமன, பதவியுயர்வு பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது. இப் பிரிவு கீழ்க் காணும் உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ளது.

| | |
|---|---|
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | - 01 |
| உதவிச் செயலாளர் | - 09 |
| நிருவாக உத்தியோகத்தர் | - 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | - 24 |

### 5.2.1 நியமனம், பதவியுயர்வுப் பிரிவின் பணிகள்

நியமன மற்றும் பதவியுயர்வுப் பிரிவின் பணிகள் பின்வரும் இரு பிரதான பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

#### I. நியமனங்கள்

அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புகள்/ ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையில் நிரந்தரமாக்கல்,

சேவையை முடிவுறுத்தல், முதலில் வகித்த பதவிக்கு மீள நியமித்தல், பதில் கடமை /கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் நியமித்தல், சேவையிலிருந்து விடுவித்தல் (நிரந்தர/தற்காலிக அடிப்படையில்), ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையிலிருந்து இராஜினாமாச் செய்தல், சேவைக்கு/பதவிக்கு மீள நியமித்தல், ஓய்வுபெறச் செய்தல் (30/88 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் விருப்புத் தெரிவின்/கட்டாய/மருத்துவக் காரணிகளின் அடிப்படையில்), ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் அமர்த்தல், சேவைப் பிரமாணக் குறிப்புகளில் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு (ஏற்புடைய சந்தர்ப்பங்களில்) நியமித்தல்.

### II. பதவியுயர்வுகள்

அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு/ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் பதவியுயர்த்தல் (ஒரு தரத்திலிருந்து இன்னொரு தரத்திற்கு/ சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில்), பதவிகளுக்கு நியமித்தல் (சேவை மூப்பு/ கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில்).

மேற்சொன்ன பணிகள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு/தீர்மானங்களுக்கு எதிராக நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பிலும் உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் தொடர்பிலும் செயற்படுதல்.

## 5.2.2 நியமன, பதவி உயர்வுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு - 2014 சனவரி 01 ஆம் திகதி முதல் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரை

| | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஓய்வு பெறுகை | 683 |
| 2. | நிரந்தரமாக்கல் | 1889 |
| 3. | ஆட்சேர்ப்பு | 4252 |
| 4. | ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவியுயர்வு | 1821 |
| 5. | தேர்வு அடிப்படையிலான பதவியுயர்வு | 504 |
| 6. | ஒப்பந்த அடிப்படையில் மீள நியமித்தல் | 573 |
| 7. | ஒப்பந்த நியமனங்கள் | 37 |
| 8. | வினைத்திறன் காண் தடை தொடர்பான தீர்மானங்கள் | 312 |
| 9. | பதில் கடைமை / கடமை நிறைவேற்றல் நியமனங்கள் | 1037 |
| 10. | விடுவித்தல் | 120 |
| 11. | சேவையிலிருந்து விலகல் | 48 |
| 12. | பதவிகளுக்கு நியமித்தல் | 694 |
| 13 | உள்ளீர்ப்புச் செய்தல் | 4919 |
| 14 | மேன்முறையீடுகள் | 55 |
| | **மொத்தம்** | 16944 |

*அட்டவணை இல. 03*




*படம் 02*

**மீளாய்வுக்குரிய வருடத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற வழக்குகள்**

| வழக்குகள் | மொத்தம் |
|---|---|
| உயர் நீதிமன்ற வழக்குகள் | 72 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் | 09 |
| நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை வழக்குகள் | 185 |

**அட்டவணை 03**

### 5.2.3 2014 ஆம் ஆண்டில் நியமன மற்றும் பதவி உயர்வுப் பிரிவின் பணிகள் தொடர்பான பொதுவான மீளாய்வு

